# பொதுக்காலத்தின் 33 ஆம் ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு C

**இன்றைய வாசகங்கள்:**

இறைவாக்கினர் மலாக்கி நூலிலிருந்து வாசகம் 4: 1-2,

திருப்பாடல்கள் 98: 5-6. 7-8. 9,

திருத்தூதர் பவுல் தெசலோனிக்கருக்கு எழுதிய

இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 3: 7-12,

லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 21: 5-19

## திருப்பலி முன்னுரை:

**என் பெயருக்கு அஞ்சி நடக்கின்ற உங்கள்மேல் நீதியின் கதிரவன் எழுவான். அவனுடைய இறக்கைகளில் நலம் தரும் மருந்து இருக்கும்.**

இறைமகன் இயேசுவில் இனிமையான குழந்தைகளே, இளையோரே, பெரியவர்களே உங்கள் அனைவரையும் ஆண்டின் பொதுக்கால 33 ஆம்வார திருப்பலி வழிபாட்டின் அருள் நலன்களைப் பெற அன்புடன் வாழ்த்துகிறேன். இன்றைய வழிபாடு உலகின் இறுதிக்கால நிகழ்வுகளை நமக்கு நினைவூட்டி அதற்கான முன் அணியமாக்குதலை என்றும் செய்துமுடித்த நிலையிலிருந்துகொண்டிருக்கும் மக்களாக வாழ நமக்குத் தூண்டுதல் தருகிறது. ஆண்டவர் உலகுக்கு நீதி வழங்க வருகின்றார் என்றும்: அவர் பூவுலகை நீதியுடன் ஆண்டிடுவார் என்றும்: மக்களினங்களை நேர்மையுடன் ஆட்சி செய்வார் என்றும் இன்றைய இறைவார்த்தைகள் வழியாக நமக்குக் கூறப்படுவதோடு, நம்மைத் தலைநிமிர்ந்து நிற்கும்படியும் ஏனெனில் நமது மீட்பு நெருங்கி வருகின்றது என்னும் எச்சரிக்கையும் விடுக்கப்படுகின்றது.

நாம் வாழ்வு பெற ஆண்டவர் நமக்கு வழங்கும் இந்த நல்ல செய்திக்காகவும், தீமையிலிருந்து நம்மைக்காக்கக் கொண்டிருக்கும் கரிசனைக்காகவும் இவ்வேளையில் அவருக்கு நன்றி சொல்லுவோம். ஆண்டவரில் மன உறுதியுடன் இருந்து நிலைவாழ்வைக் காத்துக் கொள்ள இன்றைய திருப்பலியில் முழுமையாகக் கலந்து இறைஇயேசுவின் ஆசீர் பெறச் செபிப்போம். வாரீர்.

**விசுவாசிகள் மன்றாட்டுகள்:**

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**என்றும் வாழ்பவரே இறைவா,**

உமது மீட்பை எடுத்துரைக்கும் கருவிகளாக இருக்கும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், அனைவருக்காகவும் மன்றாடுகின்றோம்: அவர்கள் எப்பொழுதும் மனவுறுதியோடு செயற்பட்டு மீட்புக்காக உழைக்க வேண்டிய சக்தியையும், ஆற்றலையும் அவர்களுக்கு அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**என்றென்றும் பேரன்பை நிலையாகக் கொண்டுள்ள தந்தையே!**

எமது விசுவாச வாழ்விற்கெதிராக பல சக்திகள் எம்மைக் குழப்பும் இந்நாட்களில், நாங்கள் ஏமாறாதவாறு எங்கள் விசவாச வாழ்வைக் காத்துக் கொள்ளவும், போர் முழக்கங்களையும், குழப்பங்களையும் பற்றிக் கேள்விப்படும்போது திகிலுறாதிருக்கவும்: மன உறுதியோடு இருந்து எங்கள் வாழ்வைக் காத்துக் கொள்ளவும். வேண்டிய அருளை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நாவன்மையையும், ஞானத்தையும் எம் மேல் பொழியும் இறைவா!**

எங்கள் பங்கிலுள்ள குடும்பங்களில் உள்ள அனைவரும் தம் சொந்த உழைப்பில் வாழவும், அதில் உண்மையுடனும், நேர்மையுடனும் இருந்து உமது விழுமியங்களை வாழ்வாக்கவும், உழைக்கமுடியாத நிலையிலுள்ளவர்களை பேணிக்காக்கவும், மனித மாண்பை நிலைநாட்டவும் தேவையான வரங்களைப் பொழியவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**அருட்கொடைவள்ளலே இறைவா!**

புனிதர்கள் மற்றும் மரித்த ஆன்மாக்களை நினைவுகூறும் இந்நாள்களில் புனிதர்களின் வாழ்விலிருந்து நல்லவற்றை நாங்கள் எங்கள் வாழ்வில் கடைபிடிக்கவும், உத்திரிக்கிற ஸ்தலத்திலுள்ள ஆன்மாக்கள் விரைவில் ஈடேற்றம் பெற்று உமது புனிதர்களின் கூட்டத்தில் இணைந்து உம்மைப் போற்றிட வேண்டிய அருள் வரங்களைப் பொழியுமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**ஒளியான எம் இறைவா!**

இளைஞர், இளம்பெண்கள் தங்கள் வாழ்வில் உம்மை அறியாமல் வாழ்ந்தக் காலங்களில் தங்கள் எண்ணங்களுக்கு ஏற்ப, இவ்வுலகச் சிற்றின்பங்களைப் பெரிதாகக் கருதி அதற்கு ஏற்பத் தங்கள் வாழ்வை இழந்த நிலையில் தங்களைத் தேற்றுவதற்கு யாரும் இல்லையே என்று ஏங்கித் தவிக்கும் இவர்களுக்கு நீர் உமது உடனிருப்பை நிறைவாகப் பொழிந்து உமது ஆவியின் அருளை நிறைவாய் பெற்றிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**உம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு உலகின் மேல் அன்பு கூர்ந்த தந்தையே!**

நாங்கள் ஒவ்வொருவரும் மனமாற்றம் பெற்று, நீர் எமக்குக்காட்டும் அன்பையும், பரிவையும் மற்றவர்களோடு பகிர்ந்து வாழ்ந்திட அருள் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**புனிதர்களின் பேரின்பமாகிய எம் இறைவா!**

எங்கள் அருகிலுள்ள ஏழைகள், துயருறுவோர், தனிமையில் விடப்பட்டோர், நோயாளிகள், அனைவருக்கும் இறைவனின் அன்பையும் பரிவையும் அளிக்கும் அன்புக் கருவியாக எம் இளைய சமுதாயம் மாறிவிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.